கழகத் தலைவர் , முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி கழக முன்னோடி மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் 107வது பிறந்தநாளை முன்னிட்டு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆகியோர் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

பேரூர் செயலாளர் மு.தேவராஜ் தலைமையில் - செம்மொழி நாயகர் பிறந்தநாள் முன்னிட்டு

திருப்போரூர் பேரூர் தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - முனைவர் சபாபதி மோகன் சிறப்புரை ஆற்றுகின்றனர்!

காஞ்சிபுரம், ஜூன். 16

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் இன்று (16.06.2025 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு அம்பேத்கர் சிலை அருகில் நடைபெறுகிறது.

திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி மன்றத் தலைவர் மு.தேவராஜ் தலைமை வகிக்கிறார்.

எஸ்.அஸ்கர் அலி, வழக்கறிஞர் வி.சந்திரன், ஆர்.பரசுராமன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஜி.பலராமன், எஸ்.ஏழுமலை, ஜி.வாணி, டி.கே.பாலசுப்பிரமணியன், ஓய்.மோகன், டி.டி.சேகர், ஏ.கமலக்கண்ணன், வி.வீரபத்திரன், ஏ.குமரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன் சிறப்புரை ஆற்றுகிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், திருப்போரூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.சேகர், காயத்ரி அன்பு செழியன், சத்திய சேகர், வீ.விஜயகுமார், டி.ஜெயச்சந்திரன், ஆர்.கோவிந்து, ச.சசிகலா, எஸ்.ஜெகதீப், எம்.சி.ராகவன், க.ரவிக்குமார், தே.செங்குட்டுவன், ஏ.முனுசாமி, ஆர்.பவித்ரா, ஆர்.நிஷாந்த், கே.எஸ்.தனபால், செ.எல்லப்பன், க.கௌரிசங்கர் மற்றும் திருப்போரூர் வடக்கு தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் டி.எஸ்.பாலு நன்றி கூறுகிறார்.

நீதியரசர் வி.பாரதிதாசன் தலைமையில் - செ.ஏழுமலை எழுதிய

கலைஞர் - வரலாற்றுச் சுவடுகள் நூல் அறிமுகம்!

கவிஞர்கள் பூவை செங்குட்டுவன் - காசிமுத்துமாணிக்கம் பங்கேற்பு!

சென்னை, ஜூன், 16 -

புதுக்கவிதை மன்னன் பேராசிரியர் செ.ஏழுமலை எழுதிய 'கலைஞர் - வரலாற்றுச் சுவடுகள்' நூல் அறிமுக விழா நேற்று (15.6.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. எசுபிளனேடு அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ் நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய தலைவர் நீதியரசர் வி.பாரதிதாசன் தலைமை வகித்தார்.

பழம்பெரும் திரைபடப் பாடலாசிரியர் கலைமாமணி கவிஞர் பூவை செங்குட்டுவன் முன்னிலை வகிக்க, கவிஞர் காசிமுத்து மாணிக்கம் சிறப்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில் ஔவை அருள் நடராசன், முனைவர் ப.தாமரைக்கண்ணன், புலவர் சீ.கிருட்டிணமூர்த்தி, டி.ஏ.,சாயாகுமார், பா.ஆசிர்பாண்டியன், போதகர் மேக்ஸ் பிரேம்சன், ஆ.டென்னனிஸ் பெசனியோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் - கொரடாச்சேரி ஒன்றியங்களில்

ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள்!

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.திறந்து வைத்தார்!

திருவாரூர், ஜூன்16-

திருவாரூர் தொகுதிக் குட்பட்ட கொரடாச்சேரி ஒன்றியங்களில் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், பொது விநியோக கடை கட்டிடங்கள், உடற்பயிற்சி கூடம் மற்றும் பயணிகள் நிழலகத்தினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் திறந்து வைத்தார்.

கொரடாச்சேரி ஒன்றியப்பகுதிகளை சேர்ந்த களத்தூர் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தினையும், மேலராதாநல்லூர் ஊராட்சியில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.15.49 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும்.

பருத்தியூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.13.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும், தேவர்கண்டநல்லூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் ரூ.16.79 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும்.

காட்டூர் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும், நாகக்குடி ஊராட்சி பண்ணைவிளாகம் கிராமத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் ரூ.16.79 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையம் கட்டிடத்தினையும்,

நாகக்குடி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.28.02 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினையும், அரசவனங்காடு ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழலகத்தினையும்,

எண்கண் ஊராட்சியில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் என மொத்தம் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து கொரடாச்சேரி ஒன்றியம் திருமதிக்குன்னம் ஊராட்சியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை பூண்டி.கே.கலைவாணன் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பூண்டி.கே.கலைவேந்தன் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



தேனி தெற்கு மாவட்ட துணை செயலாளர்செந்தில்குமார் இல்ல மணவிழாவில் கலந்துகொண்டு மணமக்கள் அபினேஷ் பாண்டியன் – தீபிகா ஆகியோர்களை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகராசன் எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அதன் தலைவர் ம.ராசேந்திரன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. இதே போன்று கழகத்தின் அறங்காவல் குழுவின் கூட்டம் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பத்மபூஷண் விருது பெற்ற தொழிலதிபர் நல்லி குப்புசாமிக்கு வாழ்த்தும், புரவலர்களாக முன்வந்திருக்கும் முஸ்தபா, சௌரிராசன், ஆர்.ஜி.சந்திரமோகன், சிவாலயம் ஜெமோகன் ஆகியோருக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.சாமிகண்ணு தலைமை!

திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி சார்பில் "செம்மொழி நாள்" புகழரங்கம்!

தொல்.திருமாவளவன் எம்.பி - இரா.முத்தரசன் - பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை!

சென்னை,ஜூன்.16-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி -12" சுயாட்சி கற்றுத் தந்தவர்! சுயமரியாதை பெற்றுத் தந்தவர்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் 17/06/25 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, பிரிக்கிளின் சாலை சந்திப்பு, வெங்கட்டம்மாள் சமாதி தெரு, ஐந்து விளக்கு அருகில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இசட்.ஆசாத், புனிதவதிஎத்திராசன் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, வானவில்விஜய், லயன்.பி.உதயசங்கர், டி.லோகேஷ், நா.துலுக்காணம், பி.ஜே.துளசிங்கம், இரா.வீரமணி, எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எல்.பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அ.கோவிந்தன், பி.சுகுமார், த.கருணாநிதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி, பெரம்பூர்.ஆர்.ராஜன், எம்.தமீம், தே.சுரேஷ்குமார்(எ) பொல்லு சுரேஷ், வி.க.வெங்கடேசன், பா.பி.தாஸ், தமிழ்செல்வி சசிகுமார் எம்.சி, ரமணிலோகேஷ் எம்.சி, மு.சரவணன் எம்.சி, ச.அம்பேத்வளவன் எம்.சி. வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, சி.பி.ஐ, மாநில செயலாளர் இரா.முத்தரசன், அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மாவட்ட செயலாளர் வி.சி.க. உஷாராணி, மாவட்ட செயலாளர் - சி.பி.ஐ. டி.கே.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட தலைவர்-தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி ஜெ.டில்லிபாபு திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர், செ.தமிழ்வேந்தன், தண்டலம் திரு.வி.க.நகர் தொகுதி பார்வையாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன் கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு சி.மகேஷ்குமார் தமிழன்பி ரசன்னா, பி.கே.மூர்த்தி எம்.சி, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி., வே.உமாகாந்த் ஆர்.வரதன்,

மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன் தேவஜவகர், ஜி.மகாதேவன் மண்டல குழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின் எம்.சிசொ.வேலு எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, பகுதி கழக செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் வே.வாசு எஸ்.முரளி எஸ்.இராஜசேகர் வி.சுதாகர், டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.டி.ஆர்.நாகராஜ்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி டி.வி.செம்மொழி ரமேஷ்(எ)நீலகண்டன் எஸ்.பன்னீர்செல்வம் சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி., இரா.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ் க.வினோத் ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர் ஆர்.டி.சங்கர்நானா எல்.பி.எப்.மோகன் துரைகண்ணன் சுதாதீனதயாளன் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., பி.விஜயகுமார் எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார்

ம.அசோக்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத்குமார் து.ஆயிரம் கே.கோகுல் ர.கலைவேந்தன், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் தில்லைகை திரவன், புல்லட்கி.ரமேஷ் பி.புவனவதி கினார் ஆறுமுகம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி ஜி.கிருஷ்ணகுமார் எஸ்.புஷ்பராஜ் எம்.ஏ.டீக்கா எம்.இசட்.அபோய் பரிமளாசுரேஷ்பாபு,

திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வே.து.தாமரைச்செல்வன் எல்.சுப்பிரமணி வெல்டிங்எஸ்.பாபு அ.கதிரவன் இரா.புருஷோத்தமன் பா.பாபுமனேகரன் கி.நாகலிங்கம் நெல்லை.மா.முத்தையா எச்.திவாகர் அ.விஜயகுமார் கே.என்.ஸ்வீட் பாபு வி.ஜெகன்னாதன் எம்.விஜயகுமார் வ.நாமதேவன், டி.ராஜு க.எழிலன் எம்.துரைசாமி ஜெ.அண்ணாதுரை பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் டி.சீனிவாசன் பிரகாஷ், மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள் கனல்கங்கா வழக்கறிஞர் அ.சேதுராமன் கோ.கருணாகரன் எம்.சண்முகவேல் எம்.எஸ்.மைனர்பாபு மெழுக்கர் கே.ஆர்.சதீஷ், எம்.ஜெயபால் எஸ்.சதீஸ்குமார்

கே.ராமமூர்த்தி கேபிள் எஸ்.சுரேஷ் சுரேஷ்கோபி ஆர்.சீனிவாசன் பி.விவேகானந்தன் ந.தமிழ்மணி ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி, புர்ட்.என்.பாஸ்கர் பட்டாளம்.எம்.செந்தில்குமார் சாவித்திரி அன்பழகன் ஆர்.கிருஷ்ணவேணி டாக்டர்.வினோத்இளங்கோ ஜெ.அவினாஷ் எஸ்.கௌதம் எம்.அருண்குமார் எஸ்.வசந்தா எஸ்.ஜெயகுமார் கே.ஹரிபிரசாத் கே.சம்.கார்டன்.சத்தியா இளங்கோ மு.கௌரி வி.பிரகாஷ் வி.ஜெகன் எஸ்.விஜயலட்சுமி பா.ஜலபூஷனம் எஸ்.கே.சிவகுமார் இ.எஸ்.ரவிச்சந்திரன் கே.லட்சுமி ஆர்.தினேஷ் மு.முகமது ரஃபி எப்.செபஸ்டீன் எம்.விக்னேஷ் அந்தோணிஜான் இ.ஜோசுவா ஜெ.சத்ய மோகன்

டி.சங்கர் புரசை பி.சத்திஸ்குமார் அ.சாக்ரடீஸ் இ.என்.கே.வீரமணி எல்.ஜான்ரூவில் கே.காதர் மீரான் மு.விஜயகுமார் ஜி.சூர்யகுமார் எம்.ஜி.குமாரசாமி ஆர்.நிலவழகன் ஜெ.வசந்த்கோகுல் பி.செந்தில் ஆர்.சுரேஷ்,

திரு.வி.க.நகர் தெற்கு வடக்கு பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ப.ஸ்ரீதர்ராஜன் எம்.சக்திவேல் ஈஸ்வரிகண்ணன் சாந்திமாசிலாமணி மு.தர்மராஜ் ஜெ.மணிகண்டன் ஜெ.எம்.நிறைமொழி ஏ.சகிலா இரா.பிரியா மகேஸ்வரி எஸ்.ராஜேஷ் எஸ்.விஜய்மகேந்திரன் தியாகராஜன் ஜெகதீஷ் சி.ராஜ்குமார் ர.மானோஜ்குமார்,

திரு.வி.க.நகர் தெற்கு வட்ட கழக நிர்வாகிகள்: 76வது வட்டம் : ஜி.ஏழுமலை ஆ.குருமூர்த்தி ரா.ஞானசௌந்திரி கே.முருகா என்.எம்.செந்தில் சரவணன் கே.முரளி(எ)குள்ளா டி.நீதிதேவன் வி.டில்லிராஜ் பி.மலர், கே.சிவபாதம் எஸ்.சோனிரமேஷ் ஆர்.சுரேந்திரன் லலிதாமுத்து கே.பி.சுரேஷ் இரா.கார்த்திக் சி.நோவிஸ் வே.ராம்குமார் சி.தர்மன் பி.தமிழ்வாணன், கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன் நன்றி கூறுகிறார்கள்.

தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் -

'கீழடி - தொடரும் வஞ்சக அரசியல்' கருத்தரங்கம்!

கோவை. கு.இராமகிருட்டிணன் - சு.வெங்கடேசன் எம்.பி. - பேராசிரியர் கருணானந்தன் சிறப்புரை!

சென்னை, ஜூன் 16

தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 'கீழடி - தொடரும் வஞ்சக அரசியல்' எனும் கருத்தரங்கம் சென்னை அன்பகத்தில் நேற்று (15.6.2025 - ஞாயிறு மாலை 5 மணியளவில்) நடைபெற்றது.

'கீழடி - தொடரும் வஞ்சக அரசியல்' எனும் இக்கருத்தரங்கத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை. கு.இராமகிருட்டிணன் தலைமையுரையும், ஜனா விஜய் வரவேற்புரையும் நிகழ்த்த,

மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், பேராசிரியர் கருணானந்தன், வழக்கறிஞர் வை.இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் இதில் து.இரவிச்சந்திரன், ம.ரே. இராஜ்குமார், வழக்கறிஞர் சரவணன், ஆவடி நாகராசு, மா.கண்ணதாசன், து.வெங்கடேசன், சித்ரா, கிரேசி, வெங்கடேஷ் முன்னிலை வகித்தனர்.

கு.சுரேஷ்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியை, சென்னை மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் எம்.அன்பரசின் புதல்வர்

39(அ) வட்ட பகுதிப் பிரதிநிதி ஏ.எம்.இளங்கோவன் மறைவு!

ஆர்.டி.சேகர் - ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் - தா.வ.மு.கஜேந்திரன் பங்கேற்பு!

சென்னை, ஜீன்16

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39(அ) வட்ட முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் மு.அன்பரசு அவர்களின் மகன் 39(அ) வட்ட திமுக பகுதி பிரதிநிதி ஏ.எம்.இளங்கோவன் வயது 60 (15.06.2025 ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 1.45 மணியளவில் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

மற்றும் இன்று (16.06.2025 திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிந்து புறப்பட்டு காசிமேடு மயானத்தில் நல்லடக்கம் செய்யபடுகிறது.

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், இர.பொன்இளவரசன், கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, வட்டச் செயலாளர்கள் தா.வ.மு.கஜேந்திரன், ப.குமார், மா.நாகராஜ்,

எம்.எம்.கதிரேசன், பி.அன்பழகன், வி.முத்து, து.ஆனந்த், செந்தில்குமார், கே.அடைக்கலம், ஏ.டில்லிராஜன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், பொ.து.ராஜா, வானூர் கே.ராஜி, பி.அனிதா, எஸ்.தாமரைச்செல்வி, எம்.மலர்கொடி, ஆர்.உமா, பாக பொறுப்பாளர் அருள்மொழி, மற்றும் கழகத் தோழர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.